அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 10

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 17 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. 12
   2. 100
   3. 18
   4. 216

2. புதியநூல், ஆடல், வாய்ப்பாட்டு, இசைக்கருவித்திறன் என்பவற்றை அரங்கிலே ஏற்பிக்கை செய்தலைக் குறிப்பது
   1. நிகழ்வு
   2. பட்டிமன்றம்
   3. அரங்கேற்றம்
   4. வெள்ளோட்டம்

3. காற்று வீசியதால் சருகுகள் சரசர என ஒலி எழுப்பின. இதில் சரசர என்பது
   1. இணைமொழி
   2. இரட்டைக்கிளவி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

4. பால் காட்டும் பகுசொல் உறுப்பு
   1. விகுதி
   2. பகுதி
   3. இடைநிலை
   4. சாரியை

5. “அவை புகழ் அரங்கின் மேல் ஆடுவாள்” என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்
   1. கலித்தொகை
   2. சிலப்பதிகாரம்
   3. மணிமேகலை
   4. சீவகசிந்தாமணி

6. சிங்கத்தின் வாழிடம் குகை போல மாட்டின் வாழிடம்
   1. பட்டி
   2. புற்று
   3. தொழுவம்
   4. கூடு

7. அ, இ, உ, எ, ஒ என்பன
   1. நெடில் எழுத்துகள்
   2. மெல்லினம்
   3. இடையினம்
   4. குறில் எழுத்துகள்

1 2 3 4

8. பெரியபுராணத்தை எழுதியவர்
   1. இளம்பூரணர்
   2. சேக்கிழார்
   3. பரிமேலழகர்
   4. தொல்காப்பியர்

9. வியங்கோள் வினைக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. பாடிய
   2. படித்து
   3. வாழிய
   4. படித்தான்

10. காப்பிய மரபுகளை எடுத்துரைத்த இலக்கணநூல்கள் தோன்றிய காலம்
   1. சோழர்காலம்
   2. பல்லவர்காலம்
   3. சங்ககாலம்
   4. சங்கமருவியகாலம்

11. சீரும் சிறப்பும் என்ற இணைமொழியின் பொருள்
   1. இரவும் பகலும்
   2. உயர்வும் தாழ்வும்
   3. மிகச்சிறப்பு
   4. நல்லதும் கெட்டதும்

12. சோழர் காலத்தைக் காப்பிய காலம் என அழைத்தனர். இச்சொல்லியம்
   1. செயப்பாட்டுவினை
   2. செய்வினை
   3. தன்வினை
   4. பிறவினை

13. கவின் கலைகளுள் ஒன்று
   1. இரும்பு உருக்குதல்
   2. மட்கலம் வனைதல்
   3. நெசவு நெய்தல்
   4. சிற்பக்கலை

14. மாந்தர் பென்னம்பெரிய மரங்களை அழிக்கின்றனர். இதில் பென்னம்பெரிய என்பது
   1. அடுக்குத் தொடர்
   2. அடுக்கிடுக்குத் தொடர்
   3. இணைமொழி
   4. இரட்டைக்கிளவி

15. குழலி பல நூல்களைத் தேடிப் படிக்கிறாள். இதில் வேற்றுமை உருபு ஏற்றசொல்
   1. நூல்கள்
   2. தேடி
   3. பல
   4. படி

1 2 3 4

16. தமிழிலக்கிய வரலாற்றில் சோழர்காலமானது
    1. இறைநெறிக்காலம்
    2. இருண்ட காலம்
    3. இலக்கியகாலம்
    4. காப்பியகாலம்

17. அவையோர் மணமக்களை பூவும் மணமும் போல வாழ்கவென வாழ்த்தினர். இதில் பூவும் மணமும் போல என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. உவமைத்தொடர்
    3. மரபுச்சொற்றொடர்
    4. அடுக்கிடுக்குத்தொடர்

18. பறவை வானத்தில் உயரப் பறந்தது. இதில் பறவை
    1. இடுகுறிச்சிறப்புப்பெயர்
    2. இடுகுறிப்பெயர்
    3. காரணப்பெயர்
    4. காரண இடுகுறிப்பெயர்

19. தாய்மொழியாகிய தமிழ்மொழியை இழந்தோராய் வாழும் நாடு
    1. சிங்கப்பூர்
    2. பியிதீவுகள்
    3. மலேசியா
    4. இந்தியா

20. வினாவுக்கு விடை சொல்லுதல் என்பது
    1. செப்புதல்
    2. பேசுதல்
    3. பறைதல்
    4. பனுவுதல்

21. தனிமொழியாக வரும் சொல்
    1. தாமரை
    2. பாகல்
    3. காற்று
    4. கானகம்

22. உணவு வகைகளைச் சமைக்கும் இடம்
    1. அட்டில்
    2. அங்கதம்
    3. அல்லங்காடி
    4. அங்காடி

23. செவ்வாய் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. செவ் + வாய்
    2. செ + வாய்
    3. செம்மை + வாய்
    4. சேவ் + வாய்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

24. கணவன், மனைவி, பிள்ளைகள் என இல்லம் என்ற தளத்தில் கூடி வாழ்வது
    1. இனியவை கூறல்
    2. துறவறம்
    3. இல்லறம்
    4. அழுக்காறு

25. ஓட்டைக்கை என்னும் மரபுச்சொற்றொடர் குறிப்பது
    1. சரி செய்தல்
    2. விடாப்பிடி
    3. மிகுந்த செலவாளி
    4. வேடதாரி

26. க், ச், ட், த், ப், ற் என்ற எழுத்துக் கூட்டம்
    1. வல்லினம்
    2. மெல்லினம்
    3. இடையினம்
    4. உயிரெழுத்துகள்

27. இராமச்சந்திர கவிராயர் வாழ்ந்த காலம்
    1. இருபதாம் நூற்றாண்டு
    2. பத்தாம் நூற்றாண்டு
    3. பத்தொன்பதாம் நூற்றாண்டு
    4. பதினெட்டாம் நூற்றாண்டு

28. செய்யுள் என்பதன் ஒத்தசொல்
    1. நூல்
    2. பரிதி
    3. பா
    4. பணி

29. சேரன் ஒரு சிறந்த பண்பாளன். இதில் பண்பாளன் என்பது
    1. குறிப்புவினை
    2. தெரிநிலைவினை
    3. தன்வினை
    4. பிறவினை

30. குடும்பக் கொண்டாட்டங்களில் ஒன்று
    1. இறைநெறிக் கொண்டாட்டம்
    2. பிறந்தநாள் கொண்டாட்டம்
    3. இனக்கொண்டாட்டம்
    4. பள்ளிவிழாக்கள்

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மாதவியின் அரங்கேற்றத்தைச் செயற்படுத்தத் துணை நின்றவர்களில் இருவரது பெயர்களை எழுதுக.

______________________________________________

2. நால்வகை உறுதிப்பொருள்களும் எவை?

______________________________________________

______________________________________________

3. மூலமொழியில் இருந்து இலக்குமொழிக்கு மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளருக்கான இரண்டு தகைமைகளை எழுதுக.

______________________________________________

______________________________________________

4. தாய் - பிள்ளை - சோறு ஆகிய சொற்களைக் கொண்டு ஆறு சொற்களுக்குக் குறையாமல் சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________________________

______________________________________________

5. அ.்.றிணை, ஒன்றன்பால், படர்க்கை, நிகழ்கால வினைமுற்றுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

______________________________________________

______________________________________________

6. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது எவ்வகை மொழி?

______________________________________________

7. எமது கலைகளைப் பேணி வளர்த்து அடுத்த தலைமுறையினரிடம் பொறுப்பாகக் கையளிப்போம்.

எழுவாய்: ____________________ செயப்படுபொருள்: ____________________

பயனிலை: ____________________ அடைமொழி: ____________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

ஓர் இனத்தின் வரலாறானது, அவ்வினம் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் பகுதிகளில் நடத்தப்படும் தொல்லியல் ஆய்வுகள் வாயிலாகக் கிடைக்கப் பெறும் சான்றுகள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. முற்காலத்தில் குமரிக்கண்டம் என்னும் நிலப்பகுதி இருந்தது என்றும் அங்கு தமிழரால் தமிழ்ச்சங்கங்கள் அமைக்கப்பட்டு தமிழ் வளர்க்கப்பட்டது என்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. குமரிக்கண்டத்தின் பெரும்பகுதி கடற்கோள்கள் காரணமாக கடலுக்குள் மூழ்கியது. மீதிப் பகுதி உடைந்து சிதறி, சிறுசிறு தீவுகளாகப் பிரிந்து போயின. இதன் விளைவாக ஈழம் தமிழகத்திலிருந்து பிரிந்து தனித் தீவாகியது. தமிழர் தொன்றுதொட்டு ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்துள்ளனர். ஈழத்தின் நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொன்மக் குடிமக்களாகிய இயக்கரும் நாகரும் தமிழரின் மூதாதையினராவர். அவர்கள் தனித்தன்மையான மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றுடன் வாழ்ந்துள்ளனர் என்பதைச் சான்றுகள் உறுதி செய்கின்றன. வடதமிழீழத்திலுள்ள கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் நாகபாம்பைக் குலமரபுத் தெய்வமாகக் கொண்ட பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பெருமளவில் கிடைத்துள்ளன.

(10 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

மொழி என்பது அதனைப் பேசுவோருக்கு மட்டுமே தாய்மொழியாக இருப்பதில்லை; பிற்காலத்தில் தோன்றும் வேறு மொழிகளுக்கும் தாய்மொழியாக இருக்கின்றது. இவ்வாறான மொழிகள் உலகின் மூத்த மொழிகளாக விளங்குகின்றன. தமிழ்மொழியும் அத்தகையதே! பல ஆயிரம் ஆண்டு பழைமையான தமிழ், தானே தோன்றிய மொழியாகும். தமிழ்மொழி தோன்றிய காலத்தை இன்றுவரை எவராலும் கணிப்பிட முடியவில்லை. அத்துடன் பின்பு தோன்றிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகளுக்கும் தமிழ் தாய்மொழியாக இருந்து வருகின்றது. இவற்றைவிட தமிழ்மொழி வேறு பல மொழிகளுக்கும் தாய்மொழியாகத் திகழ்கின்றது. உலகின் செம்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். ஏறத்தாழ 82 மில்லியன் மக்கள் தமிழ்மொழியைப் பேசுகின்றனர்.

(10 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

**5. தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

**ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. கல்வி
2. 

**அல்லது**

**பாடலுக்கான பொருளுரையை எழுதுக.**

3. பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
   நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரவை
   வீசுபுகழ் நல்லூரான் வில்லவ ராயன்
   கனக வாசலிடைக் கொன்றை மரம்

(10 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. அரங்கேற்றம்
2. இல்வாழ்க்கை
3. நீர் பார்த்து மகிழ்ந்த பண்பாட்டு விழா
4. புலம்பெயர் நாடுகளில் இளையோரும் தலைமுறை இடைவெளியும்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- வாழிடநாட்டில் பெற்றோரின் வாழ்க்கை முறைக்கும் பிள்ளைகளின் வாழ்க்கை முறைக்கும் இடையிலான வேறுபாடு
- தாயகப் பண்பாடுகளை உள்ளவாறே பின்பற்றுவதிலுள்ள சவால்கள்
- தொழில்நுட்பப் பயன்பாட்டிலுள்ள இடைவெளிகள்

(15 புள்ளிகள்)

# பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

சிறுகதை என்பது மக்களின் கதை கேட்கும் ஆர்வத்தால் பொழுதுபோக்குக்கு இடமளிக்கும் வகையில் தோன்றியதாகும். இன்று, இச்சிறுகதைகள் குமுகாயத்தில் பலரும் விரும்பிப் படித்துப் பயன்கொள்ளத் தக்க வகையில் எளிமையான இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அத்துடன் இவை சிலநேரங்களில் வாழ்க்கையின் திருப்பங்களாகவும் அமைகின்றன. சிறந்த சிறுகதைகள் மூலம் அறிவுரைகள் சொல்லப்படுகின்றன. அதனால், மக்கள் பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கத்தினை உயர்த்துவதற்கும் இவை துணையாக இருக்கின்றன. கற்பனை, ஆற்றல், சொல்நயம், மொழிநடையமைப்பு ஆகியவை சிறுகதையின் தோற்றத்திற்கு அடிப்படையாகின்றது. குமுகாயத்தில் ஆற்றல் மிக்கதோர் இலக்கிய வடிவமாகச் சிறுகதைகள் விளங்குகின்றன. சொல்கின்ற கருத்தில் தெளிவும் தெளிவான மொழிநடையும் இதற்கு இன்றியமையாதது. இதனால், சிறுகதை இலக்கியத்தினை மிகக் கடினமான வெளியீடு என எழுத்தாளர் கருதுவர். ஐந்நூறு பக்கங்களில் எழுதப்படும் புதினத்தை விட ஐந்து பக்கச் சிறுகதையின் வேகம் மிகுதியானதாகும்.

1. மக்களின் கதை கேட்கும் ஆர்வத்தால் பொழுது போக்கிற்கு இடமளிக்கும் வகையில் தோன்றியது எது?

______________________________________________

______________________________________________

2. இலக்கியங்கள் பலரும் விரும்பிப் படிக்கும் வகையில் எவ்வாறு உள்ளன?

______________________________________________

______________________________________________

3. சிறந்த சிறுகதைகள் எவற்றைக் கூறுகின்றன?

______________________________________________

______________________________________________

4. சிறுகதைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருப்பவை எவை?

______________________________________________

______________________________________________

5. மிகக் கடினமான வெளியீடு என எழுத்தாளர் கருதுவதன் காரணம் யாது?

______________________________________________

______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**2. நாட்குறிப்பை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

## மகிழனின் நாட்குறிப்பு

**02.12.2023 சனிக்கிழமை**

இன்று தமிழ்பள்ளியில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். பண்டைத் தமிழர் அறிவியல் துறையில் சிறந்து விளங்கினர் என்று ஆசிரியர் கதையை மிகவும் அழகாகக் கூறியிருந்தார். அதில் உலகம் உருண்டை வடிவமானது; அது தன்னைத்தானே சுற்றி வருகின்றது என்றும் கூறினார். ஆசிரியருடன் நாங்களும் கலந்துரையாடினோம். அது பற்றி வள்ளுவரும் தனது குறளில் கூறியுள்ளது வியப்பாக இருந்தது.

1. இன்று மகிழன் பள்ளியில் மகிழ்ச்சியாக இருந்தான். ( )
2. மகிழன் தமிழ்பள்ளிக்குச் செல்லவில்லை. ( )
3. உலகம் உருண்டை வடிவமானது. ( )
4. இன்று தமிழ்வகுப்பில் கலந்துரையாடல் நடைபெறவில்லை. ( )
5. அறிவியல் பற்றி வள்ளுவரும் கூறியுள்ளார். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |